
# இந்து

## ஆரணம்

### சித்தர் ஆன்மீக மாத இதழ்

இந்து : 1 14—1—94 விலை ரூ. 3-50 ஆரணம் : 5




ஆசிரியர் : அருட்சேனை தளபதி கு. இரவிமணி B.Sc. B.Tech

# இந்து வேத மஞ்சள் முக்கோண விளக்கம்

பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி அமராவதியாற்றங்கரை பசுபதீசுவரர் கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் வெள்ளை, சிவப்பு, பச்சை, எனும் மூன்று வண்ணங்களையுடைய பட்டுத் துணிகளில் மஞ்சள் நிற முக்கோணம் வரைந்து அதில் முக்கோணத்தின் அடிப்பக்கத்தில் நாடு என்றும், முக்கோணத்தின் இடது பக்கத்தில் மொழி என்றும், முக்கோணத்தின் வலது பக்கத்தில் இனம் என்றும் எழுதி முக்கோணத்தின் நடுவில் மதம் என்றும், அதற்குக் கீழ் கடவுள் என்றும் எழுதி இந்துவேத விளக்கமாக எல்லோருக்கும் அனுப்பினார்; கோயில்களில் கொடியாக பறக்கவிடச் செய்தார்; நுழைவு வாயில்களில் திரைச் சீலைகளாக தொங்கவிடச் செய்தார் என்ற குறிப்பு அவருடைய குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரசபாரம்பரியம் என்ற மூன்று நூல்களிலும் தெளிவாகக் குறிக்கப்படுகிறது.

இந்து வேதத்தில் முதன்மையுள்ள சிறப்புக்குரிய, வலியுறுத்திக் கூறப்பட வேண்டிய கருத்துக்கள்; இருக்குவேதம், அசுரவேதம், அதர்வான வேதம், சாமவேதம்(ஸாம வேதம்) என்ற நான்கு வேதங்களிலும் ஒரே எண்ணிக்கைக்குரிய காண்டத்திலும், மண்டலத்திலும் நாள் உரைக்கோவைகளிலும் (வாக்கு, வாக்கியம், வாசகம்) எழுதப்படுகின்ற மரபு இருக்கிறது. இதன்படி, இந்த இந்து வேதம் மஞ்சள் முக்கோணத்தின் விளக்கம் காண்டம் 5-இல் (ஐந்து), மண்டலம் 17-இல் (பதினேழு) நாள் உரைக்கோவை 15-இல் (பதினைந்து) விளக்கப்பட்டிருக்கிறது.

இருக்குவேதம் 9999 காண்டம்-5 மண்டலம்-17 நாள் வாசகம் 15.

1. ஓர் இனத்துக்குரிய கடவுள்கள்; அந்த இனத்தவர்களை மட்டுமே பாதுகாத்திடுவார்கள்'
2. ஒரு மொழிக்குரிய கடவுள்கள்; அந்த மொழிக்குரியவர்களை மட்டுமே பாதுகாத்திடுவார்கள்'
3. ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள்; அந்த நாட்டவர்களை மட்டுமே பாதுகாத்திடுவார்கள்'

அசுர வேதம்-9999 காண்டம்-5 மண்டலம்-17 நாள் வாக்கு 15.

1. ஒரு குடும்பத்துக்குரிய ஆண்டவர்கள்; அந்தக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே பாதுகாப்பார்கள்'
2. ஒரு குலத்துக்குரிய தெய்வங்கள்; அந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே பாதுகாப்பார்கள்'
3. ஒரு கிராமத்துக்குரிய தேவர் தேவதைகள்; அந்தக் கிராமத்துக்குரியவர்களை மட்டுமே பாதுகாப்பார்கள்'
4. ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள்; அந்த நாட்டுக்குரியவர்களை மட்டுமே பாதுகாப்பார்கள்'

யாம வேதம்-9999 காண்டம்-5 மண்டலம்-17 நாள் வாசகம்-15.

1. ஒரு மொழிக்குரிய கடவுள்கள்; அந்தமொழியிலேயே கூறப்படும் பூசைமொழிகளையும், பாடப்படும். பாடல்களையும், விடுக்கப்படும் வேண்டுகோள்களையும் மட்டுமே ஏற்று அருள் புரிந்து பாதுகாப்பளித்திடுவார்கள்'
2. ஓர் இனத்துக்குரிய கடவுள்கள்; அந்த இனத்தாருக்குரிய உடை, உணவு, உறவு முதலிய பழக்க வழக்கங்களையே விரும்பி ஏற்று அருள் புரிந்து; தங்கள் இனத்தவரை மட்டுமே பாதுகாத்திடுவார்கள்'
3. ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள்; அந்த நாட்டின் எல்லைக்குள்ளேயே, தாங்கள் வாழும் கோயில்களுக்குள்ளேயே இருந்து அருள் புரிந்து; தங்கள் நாட்டவரை மட்டுமே பாதுகாத்திடுவார்கள்'!

அதர்வான வேதம்-9999 காண்டம்-5 மண்டலம்-17 நாள் வாக்கியம்-15

1. ஒரு மொழிக்குரியவர்களின் கடவுள்கள், வேற்றுமொழிகளைக் கற்றுக்கொள்ள மாட்டார்கள்; மாற்றுமொழியினரை ஏற்றுப்பாதுகாக்கமாட்டார்கள்'
2. ஓர் இனத்துக்குரியவர்களின் கடவுள்கள், வேற்று இனத்தவர்களைத் தெரிந்து கொள்ள மாட்டார்கள்; மாற்று இனத்தவரை ஏற்றுப்பாதுகாக்கமாட்டார்கள்;
3. ஒருநாட்டுக்குரியவர்களின் கடவுள்கள் வேற்றுநாட்டுக்கு வரமாட்டார்கள்; மாற்று நாட்டாரை ஏற்றுப்பாதுகாக்கமாட்டார்கள்'

## பொருளடக்கம்


| | |
|---|---|
| தலையங்கம் | 4 |
| ஒரே கடவுள்தானா | 5 |
| இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் புரிந்துகொள்ளுங்கள் | 9 |
| கேள்வி – பதில் | 13 |
| குண்டலினி மாயை | 15 |
| மந்தரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் | 18 |
| அசரிரீ | 19 |
| காங்கிரசின் சாதனையே!! பிரிவினைப்போக்கு!!! | 20 |
| சமயமும், அறிவியலும்: | 21 |


---

## மாரி காயந்திரி மந்திரம்

1 ஓம் கருவுரியே! குருவுரியே! தருவுரியே! திருவுரியே! மகிழ்க!

2 ஐம்பூதவிதியே! விரியே! பூசாகாரியே! பயங்கரியே! பிறைசூடியே!

3 தேவதேவி! மழைமகளே! பிறமவடிவே! விசும்பே! மாரியே!

4 அரிசிட்ட கூழ்; கருவாடு முட்டை; அகத்திக்கிரை முருங்கைக்
காய்; பக்குவமாய்ச் சமைத்த படையலே!

5 சுற்றமொடு நற்றவமாய் நல்குகிறோம் ஏற்றுக் காத்திடுக!

6 பருவமழையே! தழைத்தெழுநீ! தழைத்தெழுநீ!
தழைத்தெழுநீ! தழைத்தெழுநீ!

---

# எம்மதமும் சம்மதமா ! ! ! ? ? ?

உலகிலேயே இந்தியா என்ற ஒரு நாடு தான் மதசார்பற்ற நாடு என்று அதிக அளவில் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்கிறது. இதற்கேற்பவே, இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்ததாக உரிமை பாராட்டிக் கொள்ளும் காங்கிரசுவாதிகள் வாய்கிழிய 'எம் மதமும் சம்மதம்! எம்மதமும் சம்மதம்?' என்று எழுதியும் பேசியும் வருகிறார்கள், என்று எழுதியும் பேசியும் வருகிறார்கள், என்று எழுதியும் பேசியும் வருகிறார்கள்!!!

ஆனால்! ஆனால்! ஆனால்!! காங்கிரசு கட்சியில் சீக்கிய மதத்தவர்கள், புத்த மதத்தவர்கள், சமண மதத்தவர்கள், கிருத்துவ மதத்தவர்கள், இசுலாம் மதத்தவர்கள் என்று பல மதத்தவர்கள் இருக்கிறார்கள். அதாவது, அரசியலில் காங்கிரசுவாதிகளாக இந்து மதத்தை மட்டும் சேர்ந்தவர்களல்லாமல் மற்றபடி பல்வேறு மதத்தைச் சேர்ந்த காங்கிரசுகாரர்களும் இருக்கிறார்கள். ஆனால் இந்த பல்வேறு மதத்தைச் சேர்ந்த காங்கிரசுவாதிகளும் எம்மதமும் சம்மதமா? என்ற வினாவை எழுப்புகிறவர்களாக இருக்கிறார்களே தவிர; எம்மதமும் சம்மதம் என்ற கருத்தை ஒப்புக் கொள்வதாக இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை.

அதாவது, இன்றுள்ள காங்கிரசு கட்சியில் உள்ள இந்துக்களை தவிர மற்ற மதத்தைச் சேர்ந்த யாருமே 'எம்மதமும் சம்மதம்' என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள நம்பிட, நடைமுறைப்படுத்திட தயாராக இல்லை! தயாராக இல்லை! தயாராக இல்லை!! தயாராகவே இல்லை!! இதுதான் உண்மை! இதுதான் உண்மை! இதுதான் உண்மை!

இருந்த போதிலும்! இருந்த போதிலும்! இருந்தபோதிலும்!!! இந்த இந்துமத காங்கிரசுவாதிகள் மட்டும் முரட்டுப் பிடிவாதமாக, வறட்டுப் போக்கில்; மற்றுமுள்ள எல்லா மதத்தவர்களுக்கும் கற்பனையாக, தங்களையே பதிலிகளாகவும், வாரிசுகளாகவும் அறிவித்துக்கொண்டு; 'எம்மதமும் சம்மதம்' என்ற கொள்கைதான் இந்திய அரசின் கொள்கை என்று கூறிக்கொண்டேயிருக்கிறார்கள், என்று கூறிக்கொண்டேயிருக்கிறார்கள், என்று கூறிக்கொண்டேயிருக்கிறார்கள். இதன் பொருள் நமது காங்கிரசு கட்சிக்காரர்கள் இந்து மத போலிகளாகவும், அன்னிய மதங்களை பாதுகாக்கும் வேலிகளாகவும் வாழ்வதுதானே!? வாழ்வதுதானே!? வாழ்வதுதானே!?...என்று இந்துக்கள் கருதுவது,

சரியா? தப்பா?...சரியாதப்பா???!!!

சரியா? தப்பா?...சரியாதப்பா???!!!

சரியா? தப்பா?...சரியாதப்பா???!!!

●

## ஒரே ஒரு கடவுள்தானா?!...

# எல்லா மொழியினருக்கும், இனத்தவருக்கும், நாட்டவருக்கும்

இந்த வினாவிற்கு விளக்கமான விடையினை எல்லா மொழியினரும், எல்லா இனத்தவரும், எல்லா நாட்டவரும் முழு மனதோடு உணர்வு விழித்த நிலையில் சிந்தைத் தெளிவோடு உண்மைகாண வேண்டும் என்ற நோக்கோடு, நிதானப் போக்கோடு அறிவுப் பூர்வமாகக் கண்டுபிடிக்க முயற்சித்தாலேயே போதும், முயற்சித்தாலேயே போதும், முயற்சித்தாலேயே போதும்!...; இந்த உலகில் எல்லா வகையான பிரிவினைப் போக்குகளும், ஏற்றத்தாழ்வுக்குள்ள வேற்றுமை வெறிகளும்; தீண்டாமைக் கொடுமைகளும், சூழ்ச்சியால் பிறரை வீழ்த்தி, தாழ்த்தி, அடிமைப்படுத்திச் சுரண்டுகிற நோக்குகளும்; உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற சாதி மத வெறிகளும், மத மாற்று வெறிகளும்; மத ஆக்கிரமிப்புக் கடுமைகளும், கொடுமைகளும்... தோன்றவே முடியாது, தோன்றவே முடியாது, தோன்றவே முடியாது.

இக் கருத்தைத்தான், அண்டபேரண்ட மாளும் பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் தங்களுடைய தாய் மொழியும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளியுள்ள இந்து வேதமான இருக்கு வேதத்திலும், இந்த இருக்கு வேதத்தின் கிளைகளான அசுர வேதம், யாம வேதம் (சாம வேதம்), அதர் வான வேதம் ஆகிய நான்கு வேதங்களிலும் மிகமிகத் தெளிவாகவும், விளக்கமாகவும், நேரடியாகவும் அருளுகின்றனர்.

**இருக்கு வேதம் காண்டம் : 8, மண்டலம் : 16, நாள் வாசகம் : 32**

'இம் மண்ணுலகம் நெருப்புக் கோளமாகவும், பனிக் கோளமாகவும், நீர்க் கோளமாகவும் இருந்து கல்லும் மண்ணும் தோன்றிட ஆரம்பித்த காலத்தில் இருந்தே பொருள் அணுக்களும், அருள் அணுக்களும், உயிர் அணுக்களும், மெய் அணுக்களும், படிப்படியாகத் தோன்றி உயிர்மெய் அணுக்கள் வடிவப்பட்டுப் பயிரினங்களும், உயிரினங்களும் காலப் போக்கில் தோன்றின. அக்காலக் கட்டங்களிலேயே அருவங்கள், அருவ உருவங்கள், உருவ அருவங்கள், உருவங்கள் என்று நான்கு வகையான வடிவமைப்புக்களை உடைய அருளுலகத்தவர்கள்; இம் மண்ணுலகில் நீர்ப் பரப்புக்கிடையில் இருந்திட்ட எல்லா வகையான நிலப்பரப்புக்களிலும் பயிரினங்களையும், உயிரினங்களையும் போல் வகைவகையாகத் தோன்றினார்கள். இவர்களையெல்லாம்உண்ணாழிகளில் தங்கச் செய்து; இவர்களின் வகைகளைப் பட்டியலிட்டு; இந்த அருளுலகத்தவர்கள் கடவுள்கள் என்ற பொதுப் பெயரில் மொத்தம் எட்டு இலட்சத்து என்பத்து நாலாயிரத்து எழுநூற்றி முப்பத்தாறு (8,84,736) வகைப்படுவர் என்ற கணக்கு வழங்கப்படுகிறது. இவர்கள் எந்தெந்த நாட்டு எல்லைக்குள், எந்தெந்த இனத்தவர்களுக்கிடையில், எந்தெந்த மொழியினர் வாழும் பகுதியில்இயற்கையாகப் பிறப்பெடுத்தார்களோ! பிறப்பெடுக்கிறார்களோ! பிறப்பெடுப்பார்களோ...; அந்தந்த நாட்டவருக்கும் இனத்தவருக்கும் மொழியினருக்கும் மட்டுமே உரியவர்களாகிவிடுவார்கள். எனவே ஒவ்வொரு நாட்டவருக்கும் ஒவ்வொரு இனத்தவருக்கும் ஒவ்வொரு மொழியினருக்கும் நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில், நூறாயிரக் கணக்கில் தனிப்பட்ட கடவுள்கள் தான் உண்டு. இக்கடவுள்கள் தங்களுடைய நாட்டவருக்கும், இனத்தவருக்கும், மொழியினவருக்கும் மட்டும்தான் உதவுவார்கள்.''

**அசுர வேதம் காண்டம் : 12; மண்டலம் : 20; நாள் வாசகம் : 36**

''அசுர சத்தி, சித்தி, முக்திகளைப் பெற வேண்டுமென்றால் நமக்குப் பிடித்தமான கடவுள்கள் பிறந்த நாட்டிற்கே சென்று; அந்த நாட்டிலுள்ள இனத்தவரோடு திருமணத் தொடர்பு செய்து; அவர்கள் பேசும் மொழியைச் செம்மையாகக் கற்று அம்மொழியிலேயே எல்லா வகையான பூசை மொழிகளையும் பூசை விதிகளையும் பிறணவ எழுத்துக்களையும் பயன்படுத்திப் பத்தி செய்திட்டால்தான் உரிய பயன் கிடைக்கும்.''

**யாம வேதம் காண்டம் : 18; மண்டலம் : 36; நாள் வாசகம் : 43 :-**

''இம் மண்ணுலகில் பயிரினங்களையும் உயிரினங்களையும் பாதுகாப்பதற்காக; நூற்றுத் தொண்ணூற்று இரண்டு (192) வகைப்பட்ட உண்ணாழிகளை உடைய நாற்பத்தெட்டு வகைப்பட்ட கோயில்களை இம்மண்ணுலகுக்காக விண்ணுலகில் இருந்து வந்திட்ட பதினெண் சித்தர்களும்; பதினெட்டாம் படிக் கருப்புகளும்; நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுள் நிலையினர்களும்; நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர்களும்; நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர் நிலையினர்களும் படைத் திட்டார்கள். இந்த உண்ணாழியிலுள்ள கடவுள்கள் எட்டு இலட்சத்து எண்பத்து நாலாயிரத்து எழுநூற்றி முப்பத்தாறு (8, 84, 736) வகைப்படுவார்கள் என்றாலும், இவர்கள் எந்தெந்த நாட்டில் இருக்கின்றார்களோ அந்தந்த நாட்டில் இயற்கையாகக் கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களைத்தான் படையலாகப் படைக்க வேண்டும்; இக்கடவுள்கள் எந்த இன மக்களால் வழிப்படுகிறார்களோ அந்த இனமக்கள் பயன்படுத்தக் கூடிய உடைகளையும் அணிகலன்களையும், வாசனைப் பொருள்களையும், மலர்களையும், இலைகளையும், பட்டைகளையும், வேர்கள்... முதலியவைகளையும் தான் பூசையில் பயன்படுத்த வேண்டும்; இக் கடவுள்கள் எந்த மொழியினரால் பத்தி செய்யப்படுகிறார்களோ! அந்த மொழிக்குரிய எழுத்துக்களையும், சொற்களையும், சொற்றொடர்களையும், வாக்குகளையும், வாக்கியங்களையும், வாசகங்களையும், பயன்படுத்தித்தான் பூசை மொழிகளையும், பூசை விதிகளையும், பிறவற்றையும் செயலாக்க வேண்டும். அப்பொழுதுதான், இக் கடவுள்கள் உயிர்ப்பு நிலைகளையும், புத்துயிர்ப்பு நிலைகளையும் குறிப்பாகப் பெற்று அருளுலகப் பயன்களை மக்களுக்கு வழங்கிட முடியும்''

**அதர்வான வேதம்: காண்டம்: 21 மண்டலம்:18 நாள் வாசகம் : 36**

''அண்ட பேரண்ட அருளுலக ஆட்சியினை நிகழ்த்தும் மூலப் பதினென் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் இம் மண்ணுலகில், அருளுலகை முறையாகவும், நிறைவாகவும் உருவாக்கிட அனுப்பிய விண்ணுலக ஐவர்கள் எனப்படும்.

1. பதினெண் சித்தர்கள்
2. பதினெட்டாம்படிக் கருப்புகள்,
3. நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட கடவுள்கள்
4. நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட வழிபடு நிலையினர்கள்
5. நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட சித்தர் நிலையினர்கள் ஆகியவர்களும்; மண்ணுலக ஐவர்கள் எனப்படுகின்ற

1. முப்பத்து மூவாயிரம் [33,000] கோடி தேவர்கள்
2. நாற்பத்தெட்டாயிரம் [48,000] கோடி இருடிகள்,
3. ஆயிரங் கோடி [1000] தேவதைகள்
4. தொண்ணூற்றாறாயிரம் [96, 000] கோடி கணங்கள்
5. நூற்றெட்டாயிரம் [108, 000] கோடி முனிவர்கள் ஆகியவர்களும், இம் மண்ணுலதக்கென எட்டு இலட்சத்து எண்பத்து நாலாயிரத்து எழுநூற்றி முப்பத்தாறு [8, 84, 736] வகைப்பட்ட கடவுளர்களைப் பயன்படுத்தித்தான் அருளுலக நிறுவன நிர்வாகங்கள் அனைத்தையும் உருவாக்கி இருக்கின்றார்கள். இவர்களைக் கொண்டுதான்.

1. வானுலகு, 2. விண்ணுலகு, 3. விசும்பு உலகு, 4. ஆகாய உலகு, 5. ககன உலகு, 6. பரவெளி உலகு, 7. * பால்வெளி உலகு [இந்த *

பால்வெளி உலகு என்ற சொல்லுக்கு சில ஏடுகளில் 'பாழ்' வெளி உலகு என்ற **பாட வேறுபாடு** காணப்படுகின்றது] எனும் ஏழு உலகுகளுக்கும் உரிய அதர்வான வேத 1. அத்தர, 2. அத்திர, 3. அத்திற, 4. சாத்தர, 5. சாத்திர், 6. சாத்திற, 7. சூத்தர, 8. சூத்திர, 9. சூத்திற, 10. தோத்தர, 11. தோத்திர, 12. தோத்திற, 13. நேத்தர, 14. நேத்திர, 15. நேத்திற, 16. வேத்தர, 17. வேத்திர, 18. வேத்திற ஓச்சுக்களையும், வீச்சுக்களையும் செயலாக்க முடியும். இப்படி ஓச்சுக்களையும், வீச்சுக்களையும் செயலாக்குவதற்கு அந்தந்த நாட்டில் விளையும் இயற்கைப் பொருள்களையும், இனத்தவருக்கு உரிய வாழ்வியல் உடை, உணவு, அணிகலன்... முதலிய பொருள்களையும், மொழிக்குரிய எழுத்துக்களையும், சொற்களையும், சொற்றொடர்களையும், வாக்குகளையும், வாக்கியங்களையும், வாசகங்களையும் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இந்த நான்கு வேத உரைக் கோவைகளும் வழங்குகின்ற கருத்துக்களை நன்கு புரிந்து கொண்டிட்டால் மத வெறி, சாதி வெறி, இன வெறி, மொழி வெறி, நாட்டு வெறி, தீண்டாமை வெறி, மதமாற்றுவெறி... முதலிய வெறிகளெல்லாம் பொருளற்றவை என்பதும்; தேவையற்றவை என்பதும்; பயனற்றவை என்பதும் தெரிந்திடும், புரிந்திடும்.

அதாவது, அதாவது. அதாவது, இந்து வேதம் ஒவ்வொரு மொழியினருக்கும், இனத்தவருக்கும், நாட்டவருக்கும் உரிய கடவுள்கள் என்று நூறாயிரக் கணக்கான கடவுளர்களை அறிவிப்பதால், **'ஒரே ஒரு கடவுள் தான், எல்லா மொழியினருக்கும், இனத்தவருக்கும், நாட்டவருக்கும்'** என்ற கருத்தை இந்து வேதம் ஏற்கவில்லை, ஏற்கவில்லை, ஏற்கவில்லை; ஒப்புக்கொள்ளவில்லை, ஒப்புக் கொள்ளவில்லை, ஒப்புக் கொள்ளவில்லை, ஒப்புக் கொள்ளவில்லை.

இந்து வேதாகம பாடசாலை
பதினெண் சித்தர் மடம்,
காரணோடை, சென்னை-67.
தொலைபேசி: 654447.

---

ஓம்.

# இந்து மதம் காத்த பெரியார் மறைவு

● இருபதாம் நூற்றாண்டில் நாத்திகர்களும், மாற்று மதத்தவர்களும் எரிமலையென குமுறி வெடித்து **'இந்து மத எதிர்ப்பு'** எனும் நெருப்பு ஆறு வற்றாது கங்கை போல் ஓடுமாறு செய்து வருகிறார்கள். ஆனால் இந்த நெருப்பாற்றினால் எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் இந்து மதத்தைக் காத்திட்ட பெரியார்களுள், மடாதிபதிகளுள், பீடாதிபதிகளுள், ஆச்சாரியார்களுள் முன்னணியில் தலை சிறந்து விளங்கிய காஞ்சி **சங்கராச்சாரியார்** மறைவு எளிதில் ஈடு செய்யப்பட முடியாத ஒன்று. இதனை முழுமையாக உணர்ந்து எல்லா இந்துக்களும் புதிய எழுச்சிமிக்க முயற்சிகளோடு இந்து மதம் காக்கப்பாடுபட வேண்டும்.



அந்தணர் அண்ணல்
ஞானச்சாரியார்
பதினெண் சித்தர் மடாதிபதி
காரணோடை, சென்னை-67.

## வாசகர் வட்டம் :

# இலெனின் மொழிவெறியும் மகாத்மா காந்தியின் மொழி வெறியும் ஒன்றா...!?

இரசிய மொழி வெறியால் இரசியா துண்டுதுண்டாக உடைந்தது!

இந்தி மொழி வெறியால்—இந்தியா துண்டு துண்டாக உடையுமா?

நன்றி : 'தினமலர் நாளிதழ்' 12-12-93 ஞாயிற்றுக்கிழமை பக்கம்-7

'டி.வி.யில் இந்தி ஆக்கிரமிப்பு மே. வங்க அமைச்சர் கண்டனம்' என்ற தலைப்பில் வந்துள்ள செய்தி.

மே.வங்க மாநில தகவல் மற்றும் கலாசார விவகாரத்துறை அமைச்சர் காந்தி பிசுவாசு கூறியது:

''மெட்ரோ சேனலில் இந்தி நிகழ்ச்சிகள் அதிகமாக உள்ளன. இந்தியாவில் பல மொழிகள் உள்ளன. அனைத்திற்கும் மெட்ரோ சேனலில் சம அளவில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

நமது தேசிய மொழிகளில் இந்தியும் ஒன்று அவ்வளவுதான். அதைத் தவிர மெட்ரோ சேனலில் இந்திக்கென்று தனிப்பட்ட விசேச அந்தஸ்து கூடாது. எனவே, இந்தி பேசாத மக்களுக்கு இது விசயத்தில் அதிகாரிகள் நீதி வழங்க வேண்டும்.''

இதை-இலெனின் உற்ற நண்பர் மார்க்சின் கார்க்கி: ''விளாத்திமீர் மொழி வெறியும், மத வெறியும் ஒன்று தான். இரசிய மொழிதான் சோவியத்தின் ஒரே ஆட்சி மொழி என்ற கொள்கையே சோவியத்தை சிதைத்து விடும்'' என்று அறிவுரை கூறியதை விளாத்திமீர் இலிச்லெனின் கேட்காததால் இரசியா உடைந்தது. மகாத்மா காந்தியிடம், **'இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி'** என்ற வெறி இந்தியாவை சிதைக்கும் என்று பகுத்தறிவுக் குடியரசு கட்சியின் தலைவர் M.N. இராய், M.P.பிள்ளை தி.க. தலைவர் பெரியார், தாழ்த்தப்பட்டோர் தலைவர் அம்பேத்கார்... முதலிய பலர் எடுத்துக் கூறியும்; மகாத்மா காந்தி கேட்கவில்லையே என்ற நினைவு இந்திய மக்களுக்கு இப்பொழுது வருகிறது.

இலெனின் இரசிய மொழிவெறி சோவியத்தை சிதைத்தது!

மகாத்மா காந்தியின் இந்தி மொழி வெறி இந்தியாவை சிதைக்குமா?

# இந்து வேதத்தையும் இந்து மதத்தையும் புரிந்து கொள்ளுங்கள்

[அத்தியாயம்—5]

## (d) சைவ சமயம் = சிவ சமயம் சிவசமயம் = இந்து மதம்

### இந்து மதத்தின் சாத்திரங்கள் :

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞான போதம்
4. சிவஞான சித்தியார்
5. இருபா இருபஃது
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவட்பயன்
9. வினா வெண்பா
10. போற்றிப் பஃறொடை வெண்பா
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடு தூது
13. உண்மை நெறி விளக்கம்
14. சங்கற்ப நிவாரணம்

இந்த (a), (b), (c), (d) என்ற நான்கு பட்டியல்களிலும் உள்ளவை 'இந்து வேதம்' 'இந்து மதம்', 'தமிழ் மொழி' என்ற மூன்றுமே மிக மிக நெருக்கமான தொடர்புகளைப் பெற்றுத் திகழ்கின்றன என்ற பேருண்மையை மிகத் தெளிவாக விளக்குகின்றன. அதாவது, அண்டபேரண்டமாளும், பதினெண் சித்தர்கள், தங்களுடைய தாய் மொழியும், அண்டபேரண்ட அருளுலகஆட்சி மொழியுமான, அருளூறு அமுத தெய்வீகச் செந்தமிழ் மொழியின் மரபுகளையும், இந்துவேத மரபுகளையும், இந்துமத மரபுகளையும், ஒரே வகையான வடிவமைப்புகளைப் பெறுமாறுதான் செய்துள்ளனர் என்பதே உண்மை.

(ச) மேற்படி உண்மையால் (a) 'தமிழ் மொழி', (b) 'தமிழ் மொழி அறிவு', (c) 'தமிழ் மொழி உணர்வு', (d) 'தமிழ் மொழிப் பெருமையும், உரிமையும் பேணல்', (e) 'தமிழ் மொழியின் இலக்கிய இலக்கண வள வளர்ச்சி', (f) 'தமிழ் மொழியின் ஆட்சி மாட்சி, மீட்சி'...என்ற முழக்கங்கள், நோக்குகள், போக்குகள், ஊக்குகள்... அனைத்தும்; இந்து வேதத்தையும், இந்து மதத்தையும், 'மறந்தோர்'! 'துறந்தோர்'! 'மறுத்தோர்'! 'பகைத்தோர்'! 'நகைத்தோர்'! 'எதிர்த்தோர்'! புறக்கணித்தோர்!' 'ஒதுக்கியோர்! பதுக்கியோர்!'... செயலுக்கு வரமுடியாதவை!; செயலுக்கு வரமுடியாதவை! செயலுக்கு வரமுடியாதவை! செயலுக்கே வரமுடியாதவையாகும். அதாவது, நாத்திகர்கள், பகுத்தறிவு வாதிகள், சீர்திருத்த வாதிகள்... என்பவர்கள் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும், இவற்றுக்குரிய நிறுவன நிர்வாகங்களையும் கேலி செய்து, கிண்டல் செய்து இழித்துப் பழித்துக் கூறி! மறுத்து வெறுத்துக் கூறி! பகைத்து நகைத்துக் கூறி, எதிர்த்துப் புறக்கணித்துக் கூறி... ஏனோதானோவென்று செயல்படுகின்றனர். எனவேதான்

(i) 'தமிழுக்காகச் செய்யப்படும் எந்த முயற்சியும்; தமிழர்களின் அகவாழ்வையும், புறவாழ்வையும் தொடமுடியாதவைகளாகவே இருக்கின்றன'.

(ii) தமிழ் மொழியின் உரிமைக்காகவும், பெருமைக்காகவும், நல்வாழ்வுக்காகவும் செய்யப்படும் போராட்டங்கள் தமிழர் அனைவரும் புரியவோ! ஈடுபடவோ இயலாத ஒன்றாகவே ஆகி வருகின்றன. ஆகி விடுகின்றன.

(iii) பெரும்பாலான தமிழர்களுக்கு
'தமிழின் விழிச்சியே தமிழர்களின் விழிச்சி';
'தமிழின் எழிச்சியே தமிழர்களின் எழிச்சி';
'தமிழின் மலர்ச்சியே தமிழர்களின் மலர்ச்சி';
'தமிழின் உயர்ச்சியே தமிழர்களின் உயர்ச்சி';
'தமிழின் வளர்ச்சியே தமிழர்களின் வளர்ச்சி';
'தமிழின் உரிமையே தமிழர்களின் உரிமை';

'தமிழின் ஆட்சி மாட்சி மீட்சியே தமிழர்களின் ஆட்சி மாட்சி மீட்சி'... என்ற பேருண்மைகள் புரியாதனவாகவே இருக்கின்றன.

(iv) இவற்றையெல்லாம் விடக் கொடுமை என்னவென்றால்; 'தமிழ் வாழ்க' என்று சொல்லுபவர் யாராக இருந்தாலும்; ஏறத்தாழ அவர், நாத்தீகராக, கடவுள் வெறுப்பாளராக, மதமறுப்பாளராக, ஆன்மீக உலகின் எதிர்ப்பாளராகவே இருப்பார்! இருப்பர்! இருக்க வேண்டும்! இருக்க முடியும்!' என்ற கருத்தோட்டமே பெரும்பாலான தமிழர்களுக்கிடையில் வளமாகவும், வலிமையாகவும் இருக்கின்றது! இருக்கின்றது! இருக்கின்றது!... எனவேதான், 'தமிழ் மொழியின் பெயராலோ! அல்லது தமிழ் மொழி வழிப்பட்ட தமிழினத்தின் பெயராலோ செய்யப்படக்கூடிய எந்த செயலும் நாடு தழுவிய ஆதரவை பெற முடியாத நிலையே தொடர்ந்து நீடித்து வருகின்றது. இப்படிப்பட்ட அவலக் கேவல நிலைமைக்கு முடிவு கட்டத்தான்; இன்றைக்குப் பதினெண் சித்தர் மடாதிபதி

(i) 'தமிழும், இந்து வேதமும், இந்து மதமும் பிரிக்க முடியாதவை'.

(ii) 'இந்து வேதமும், இந்து மதமும் தமிழ் மொழியில்தான் பிறப்பெடுத்தன'.

(iii) இந்து வேதத்தையும், இந்து மதத்தையும், தமிழ் மொழி மூலமாகத்தான் தெரிய, அறிய, ஆராய, புரிய, பயன்படுத்திப் பயனடைய முடியும்! முடியும்! முடியும்!'... என்ற பேருண்மைகளை விளக்கப் புறப்பட்டிருக்கின்றார். எனவே, தமிழாசிரியப் பெருமக்களே! தமிழின், பெருமையும், அரிய பயனும், ஆன்மீக உலகக் செல்வாக்கும் இந்து வேதத்தோடும், இந்து மதத்தோடும் சேர்த்து வளர்ச்சி! மலர்ச்சி! செழிச்சி! உயர்ச்சி! அடைந்திட முயற்சி செய்வதற்காக 'இந்து வேத ஆச்சாரியாராகிடுங்கள்' என்ற வேண்டுகோளைச் சிந்தனை செய்யுங்கள்! சிந்தனை செய்யுங்கள்! சிந்தனை செய்யுங்கள்.

(ரு) யாம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் மீடாதிபதி; 'இந்து வேதம்', 'இந்து மதம்', 'தமிழ் மொழி' என்ற மூன்றும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இவை பிரிக்கப்பட முடியாதவை' என்ற பேருண்மையை வெளிப்படுத்த முயலுவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது, தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஆத்திகர்களேயாவார்கள். இந்த ஆத்திகப் பெருமக்கள் எல்லோருமே

(a) 'இந்து வேதமும் இந்து மதமும் தமிழ் மொழிக்குத் தொடர்பே இல்லாதவை'.

(b) 'இந்து வேதமும், இந்து மதமும் தமிழ் மொழியல்லாத அன்னிய மொழியில்தான் இருக்கின்றன'.

(c) இந்து வேத மந்திரங்களைச் சொல்வதானாலும் சரி; இந்து மதப் பூசைகளையோ! சடங்குகளையோ செய்வதனாலும் சரி!... தமிழ் மொழியில் எதையும் சொல்லக் கூடாது! சொல்லக் கூடாது! சொல்லவே கூடாது.

(d) 'தமிழ் மொழியில் மந்திரம் சொன்னாலோ! பூசை செய்தாலோ எள் முனையளவு கூடப் பயன் ஏற்படாது'.

(e) 'தமிழ் மொழிக்கும், மதத்துக்கும் அருளுக்கும், சத்தி சித்திக்கும் தொடர்பே இல்லை'.

(f) 'தமிழ் மொழியைத் தாய் மொழியாக உடைய தமிழர்கள் இந்துவேத ஆச்சாரியாராகவோ, சாத்திரியாராகவோ, தோத்திரியாராகவோ இருக்க முடியாது! இருக்கக் கூடாது'.

(g) 'தமிழ் மொழியைத் தாய்மொழியாக உடைய தமிழர்கள் இந்துமதக் கோயில்களில் குருவாகவோ! குருக்களாகவோ! குருமாராகவோ! குருதேவராகவோ! பூசாரியாகவோ! இருப்பதற்குத் தகுதியில்லை! தகுதியில்லை! தகுதியில்லை! தகுதியில்லவே இல்லை!' என்ற தவறான கருத்தைப் பெற்றிருக்கிறார்களே என்பதுதான் அக்காரணம். இக்காரணத்தைத் தமிழாசிரியப் பெருமக்கள் எண்ணிபார்க்க வேண்டும்.

(a) 'இந்து வேதமும், இந்து மதமும் தமிழ் மொழியில்தான் இருக்கின்றன'

(b) 'இந்துவேதப் பூசைகளையும், இந்து மதச் சடங்குகளையும் தமிழ் மொழியில்தான் சொல்ல வேண்டும்; சொல்ல முடியும், சொன்னால்தான் பயனுண்டு'.

(c) 'தமிழ்மொழியில் பூசைகளையும் சடங்குகளையும் செய்தால்தான் பயன் உண்டு என்பதை 64 திருவிளையாடல்களின் வரலாறுகளும், அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறுகளும்; சந்தானக் குரவர்களான (i) மெய்கண்ட சிவாச்சாரியார் (ii) அருணந்தி சிவாச்சாரியார் (iii) மறைஞான சம்பந்தர் (மறைஞான சம்பந்த சிவாச்சாரியார் (iv) உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வர்களின் வரலாறுகளும்; தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரியார், திருவருட் பெருஞ்சோதி ஆண்டவர் வடலூர் திருவருட்பா வள்ளல் இராமலிங்க அடிகளார்... முதலியோர் வரலாறுகளும் மெய்பிக்கின்றன.

(d) 'தமிழ் மொழியைத் தாய்மொழியாக உடைய தமிழர்கள்தான் 'குவலய குருபீடமாக', 'இந்துவேத நாயகமாக', 'இந்து மதத் தந்தையாக', 'இந்துமத ஆச்சாரியாராக', இந்துமதச் சாத்திரியாராக', இந்து மதத் தோத்திரியாராக'... இருக்க முடியும்! இருக்க முடியும்! இருக்க முடியும்! வேறு யாரும், இந்து மதத்தைப் பொறுத்தவரை தலைமை தாங்கவோ, வழி நடத்தவோ இயலாது! இயலாது! இயலாது! இயலவே இயலாது!'

(e) தமிழ் மொழியைத் தாய் மொழியாக உடைய தமிழர்கள்தான் இந்துமதக் கோயில்களில் குருவாகவோ! குருக்களாகவோ குருமாராகவோ! குருதேவராகவோ! பூசாரியாகவோ! இருப்பதற்குத் தகுதியுண்டு தகுதியுண்டு! தகுதியுண்டு! என்ற மெய்யான கருத்தைத் தமிழர்க்கும், திராவிட இனக் குடும்பத்தைச் சேர்ந்தவர்க்கும், மற்ற இந்தியர்க்கும், உலகோர்க்கும்... தெரிவித்திடும் மாபெரும் பணியை ஏற்றிடத் தமிழாசிரியப் பெருமக்கள்தான் முன்வர வேண்டும் முன்வர வேண்டும்! முன்வர வேண்டும்! அதற்காகத்தான் 'தமிழாசிரியர்களே இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்' 'தமிழாசிரியர்களே சிந்தனை செய்யுங்கள்' 'தமிழர்களே மறுசிந்தனை செய்யுங்கள்' என்ற அழைப்பினை விடுக்கின்றோம் யாம்.

iv (a) 'இன்றைக்கு, இந்துவேதக் கருத்துக்களை யார் மதிக்கப் போகிறார்கள்'? (b) 'இந்துவேதக் கருத்துக்களின்படி யார் வாழப் போகிறார்கள்?' (c) 'இந்து மதத்தை பற்றி யாருக்கு அக்கரை இருக்கிறது'? என்ற வினாக்களை எழுப்பி விடை கண்ட பிறகு தான; பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி தமிழாசிரியர்களை நோக்கி அறிவிப்பு அழைப்பு விடுக்க முன் வந்துள்ளார்.

(a) நம் மக்கள், இந்து வேதக் கருத்துக்களை மதிப்பதற்கே ஆளில்லாத இன்றைய

சூழலில்; இந்துவேதக் கருத்துக்களைப் பரப்பிட இந்தப் பதினெண் சித்தர் மடாதிபதி எதற்காக வீணான முயற்சிகளைச் செய்கிறார்?... என்று முணுமுணுப்பது எமது செவிகளில் விழுகின்றது'

ஆனால் மூன்று யுகங்களாகக் கோடான கோடி மக்களால் மதிக்கப்பட்டிட்ட இந்துவேதக் கருத்துக்களை; இன்றைக்கு மதிப்பதற்கு ஆட்களில்லை என்பதற்காக; 'இந்துவேத நாயகமாகத் திருத்தோற்றம் பெற்றுள்ள பதினெண் சித்தர் மடாதிபதியும் இந்துவேதக் கருத்துக்களை மதிக்காமலிருந்துவிட முடியுமா? எனவே, 'இன்றைக்கு இந்துவேதக் கருத்துக்களை யார் மதிக்கப் போகிறார்கள்?' என்று எண்ணியெண்ணிக் கணக்குப் போட்டுக் கண் கலங்கிக் கை பிசைந்து காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கத் தயாராக இல்லை இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை என்ற உரிமையையும், பெருமையையுமுடைய குவலய குரு பீடம், இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர் ஆகிய குரு மகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரச யோகிக் கருவூறார், பதினெண் சித்தர் மடாதிபதி. எனவேதான் தமிழாசிரியர்களுக்கு அழைப்பு விடுகிறார்.

(b) 'இந்து வேதக் கருத்துக்களின்படி யார் வாழப் போகிறார்கள்' என்று வினாவெழுப்பி ஆராய்ச்சியில் இறங்கினால்; இன்றைய வாழ்வியலில் உணவு, உடை, உறையுள் பயன்படுத்தும் பொருள்கள், பொழுதுபோக்குகள்... முதலியவை அனைத்தும் மேலைய நாட்டு முறையில்தான் உள்ளன. எனவே, பெரும்பாலான மக்கள் 'தமிழ்ப் பண்பாடு', 'தமிழ் நாகரிகம்', 'தமிழ்த் தத்துவம்', 'தமிழுணர்வு' என்பவை எப்படித் தழைக்க முடியும். இவை தழைத்தால்தானே இந்துவேத உணர்வு தழைக்கும்; அதன் மூலம் இந்து மதம் பிழைக்கும்.

எனவே, இதை எண்ணித் தயக்கமோ, மயக்கமோ, தேக்கமோ, கலக்கமோ, குழப்பமோ... அடைவது விவேகமல்ல! இந்து வேதக் கருத்துக்களின்படி எல்லோரும் வாழ்ந்த நிலையில் மாற்றம் ஏன் வந்தது? எப்படி வந்தது? அப்படி மாற்றம் ஏற்பட்டதை எவரும் எதிர்க்கவில்லையா? எதிர்த்தவர்கள் என்ன ஆனார்கள்? அந்த எதிர்ப்புணர்வு என்னவாயிற்று?... என்ற வினாக்களை எழுப்பிச் சிந்திக்கும் போதுதான்; இந்துவேத எதிரிகள், இந்துமத எதிரிகள், இந்துவேத துரோகிகள், இந்துமத துரோகிகள், தமிழ்மொழி எதிரிகள், தமிழின எதிரிகள், தமிழ்மொழித் துரோகிகள், தமிழினத் துரோகிகள்... எப்படியெப்படி எல்லாம் நுட்பதிட்டமாக வெறி மாறாமல் செயல்பட்டுள்ளார்கள் என்ற பேருண்மை மிகப் பெரிய வரலாறுகளாக வெளிப்படுவதைக் கண்டுபிடிக்கலாம்.

ஆனால், இந்த வரலாறுகளை யாரிடம் சொல்லுவது, யாரிடம் சொல்லுவது, யாரிடம் சொல்லுவது?... ஏனென்றால் ஏறத்தாழ பெரும்பாலான தமிழர்கள், தமிழ் மொழியுணர்வோ, இனவுணர்வோ இல்லாத அனாதையுணர்வு படைத்த அடிமைவாழ்வையும், கூலி வாழ்வையுமே வாழ்வாகக் கொண்டிருக்கிறார்கள். அதாவது தமிழர்கள், தங்களுடைய மதம் 'இந்து மதம்' என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத அப்பாவிகளாக, ஏமாளிகளாக இருக்கிறார்கள். தவறுதலான காலச் சூழல்களால் தமிழர்கள் 'வெறுமையான தத்துவ ஆராய்ச்சியை உடைய சைவ சமயம்; 'தத்துவமோ சித்தாந்தமோ இன்றி ஆழ்ந்த பத்தி நெறியை உடைய வைணவ மதம்' என்ற இரண்டையே தங்களின் மதமாக எண்ணுகிறார்கள். இது தவறு, தவறு, தவறு! தமிழர்களின் மதத்தில் தெற்கே கன்னியாகுமரிப் பகவதி, சூலி, நீலி, காளி, கபாலி, இசக்கி, பிரமசத்தி... என்று ஆரம்பித்து இன்றைய வடக்கே உள்ள சென்னை மாநகரம் வரை உள்ள சுடலை, சுடலையாண்டி, பேச்சி, முண்டக்கண்ணி, காத்தாயி, கருப்பாயி, முண்டக்கண்ணன், காத்தவராயன், கருப்பு, கருப்பண்ணசாமி, சின்னக் கருப்பு, பெரிய கருப்பு, சங்கிலிக் கருப்பு, வீச்சுக் கருப்பண்ண சாமி, காரணமூர்த்தி, சன்னாசி, சுடலை மாடன், சீவலப் பேரியான், முத்தாரம்மன், முத்தையா, முத்தாளம்மன், முத்தாலம்மன், அங்காளம்மன், அங்காள பரமேசுவரி, காடேரி, மேடேரி, காட்டேரி, மாரியம்மன், எல்லைக் காளியம்மன், எல்லையம்மன், செல்லியம்மன், பாண்டி முனீசுவரர், ஆறுமுக மங்கலம் சுடலை,

---

ஆசைகளே இல்லாத மனதை உண்டாக்காதே.



அளவற்ற ஆசைகள் மிகுந்த மனதையும் உண்டாக்காதே

செட்டியாபத்து ஐந்து வீட்டுசாமி, குரங்கனி முத்து மாலையம்மன், காயா மொழி முப் பிடாரி அம்மன், முப்பந்தல் இசக்கி அம்மன், திசையன் விளை சுடலை மாடன், வாகை விளை அம்மன், தேரியூர் அம்மன், தண்டு பத்து அம்மன், நயினார்புரம் அம்மன், தாண்டவங்காடு அம்மன், சிறுநாடார் குடி யிருப்பு அம்மன், பூச்சிக்காடு அம்மன், செம் மறிக்குளம் அம்மன், வேப்பங்காடு அம்மன், சண்முகபுரம் அம்மன், சாத்தான்குளம் அம்மன், தர்மபுரி பிளியனூர் அக்கிரகார முனீசுவரர், பாலக்கோடு புதூர் மாரியம்மன், சோமன அல்லி முனீசுவரர், காரிய மங்கலம் முனீசுவரர், கெலமங்கலம் முனீசுவரர், மாரண்ட அல்லி முனீசுவரர், திருநெல்வேலி பேராற்றுச் செல்லி அம்மன் (பேராச்சி அம் மன்), உச்சினி மாகாளி, சந்தன மாரியம்மன், ஆயிரத்தம்மன், கொம்பு மாடன், முண்டன், பாளையங்கோட்டை சாத்தான் கோயில் (ஐய னார். சாத்தான், சாசுத்தா) இருக்கன்குடி மாரியம்மன், சாத்தான் குளம் வண்டி மறிச்சி மம்மன், மதுரைக் கோச்சடை முத்தையா, முத்தாளம்மன், தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர், தாத்தா மதுரை மொட்டக் கோபு ரத்து முனீசுவரர், தாத்தா புதுக்கோட்டை கொப்பனாங் கோட்டை முனீசுவரர், தாத்தா திருவரங்கடம் மொட்டை கோபுரத்து முனீசு வரர், தாத்தா கரூர் நாட்ராயர், நாச்சிமுத்து, முனியம்மாள், கருப்பு, ஆத்தா கரூர் சோழி யாயி, முத்தையா, நாமக்கல் மோகனூர் செல்லியம்மன், நாவலடியான், சேலம் கோட்டை முனீசுவரர், மாரியம்மன், மாட்டு வேலம்பட்டி முனீசுவரர், அக்கரைப்பட்டி முனீசுவரர், அரியானூர் பாத முனீசுவரர், மேட்டூர் முனீசுவரர், வைண்ணங்கொடி முனீசுவரர், வெண்ணந்தூர் ஐந்து முனீசு வரர், மல்லூர் அல்லியேரி முனீசுவரர், சேடர் பாளையம் பெரிய முனீசுவரர், தாரமங்கலம் முனீசுவரர், வேம்படி தாளம் மேட்டுக்காடு கருப்பண்ணசாமி, கரூர் கொடுமுடி முத்தூர் மாரியம்மன், கரூர் வெள்ளக் கோயில் முத்துக் குமாரசாமி, ஈரோடு கொல்லிமலை வானகக் கருப்பு, இரட்டை முனீசுவரர், வீரப்பூர் மந்திர மகா முனீசுவரர், பெரிய காண்டி அம் மன், தொட்டியம் மருதக்காளி, செறுவாச்சி யூர் மருதக்காளி, உறையூர் வெற்றிவேல் தடக்கைக்காளி.

( தொடரும் )

# கேள்வி - பதில்

- **புதுமனை புகுவிழாவின்போது, முதலில் பசு மாட்டை வீட்டினுள் கொண்டு செல் வது ஏன்?**

*—சி. இளங்கோவன், திருச்சி-1*

விலங்குகளிலேயே அதாவது, உயிரினங் களிலேயே மிகுதியாக நல்லியல்புகள் மிகுந் திருப்பதும்; மனித வாழ்வுக்கு தேவையான அமுது எனப்படும் பாலை தருவதும்; மிகச் சிறந்த நச்சு மறி [அ] நச்சுக்கொல்லியான கோமியத்[மாட்டு மூத்திரம்]தையும், சாணத் தையும்; அருளுலகத்தார் அனைவருடனும் தொடர்பு கொள்ளும், வரவழைக் கும் ஆற்றலையும்; தெய்வீக எழில் மிகு அழகுத் தோற்றத்தையும்...பெற்றுத் திகழ்கிறது பசுமாடு. எனவே, எல்லா வகை யான நலன்களும், வளங்களும், வலிமை களும், பொலிவுகளும் ஏற்படுவதற்காக புதிய வீட்டிற்குள் பசுமாட்டை முதன் முதலில் அழைத்துச் செல்கிறார்கள்.

- **களத்திர தோசம் என்றால் என்ன ?**

—K.ரம்மியா, சேலம்

களத்திர தோசம்...கழுத்திர தோசம் என்ற இரண்டு வகை உண்டு. இதில் களத் திர தோசம் என்பது, வாழப் போகின்ற, செயல்பட போகின்ற இடத்தில் உள்ள குற் றங்குறைகளை, அருளுலக பாதிப்புகளை குறிக்கும்.

போர்க்களம், நெல் அடிக்கும் களம், தானியங்களை சேமிக்கும் களத்து மேடு, ஆடு மாடுகளை அடைத்து வைக்கும் களத்து வீடு என்ற சொற்களால் களம் என்றால் வாழு கின்ற [அ] செயல்படுகின்ற இடம் என்பது தெரிகிறது.

கழுத்திரதோசம் என்றால் சிறப்பாக, பெண்கள் கழுத்தில் கட்டிக்கொள்ளப் போகும்

தாலிக்கு உரிய கணவனுடைய உயிர் நிலை, உடல் நிலை எப்படியெப்படி இருக்கும் [அ] எப்படியெப்படி பாதிக்கப்படும் [அ] என்னென்ன பாதிப்புகளை பெறும் என்கின்ற முடிவுகளை கண்டறிவதற்குரியக் சாத்திர மாகும்.

நாகவரிகள் [நாகப் பாம்பின் வடிவத்தை உருவாக்கும் வரிகள்], விண்மீன் வடிவ வரிகள், குரங்கு, புலி, யானை, சிங்கம், கரடி, குதிரை, நரி, நாய், பூனை, ஆமை, முயல், நண்டு, மீன், மான், எருமை மாடு, பசுமாடு, ஆடு முதலியவைகளின் வடிவங்களை உண்டாக்கித் தரும் வரிகள். ஆலமரம், அரசமரம், பலாமரம், மாமரம், நாவல் மரம், தென்னை மரம், வேப்ப மரம், பனைமரம், பல்வேறு வகையான கொடிகள், பல்வேறு வகையான செடிகள், தருப்பை புல், கோரைப்புல், அருகம்புல் முதலிய புல்வகைகள் முதலிய வற்றின் வடிவங்களை உண்டாக்கும் வரிகள் கழுத்தில் இயற்கையாக காணப்படும். அவைகளை கழுத்தில் மஞ்சள் தேய்த்து வெற்றிலை காம்பு, முல்லை அரும்பு, ஏதாவது ஒரு வகை பூவின் காம்பு, தருப்பை புல், முதலியவற்றை நீருற்றி குழைத்த சுண்ணாம்பில் தொட்டு அங்கு தெரிகின்ற வரிகளின் மீது [இரேகை] புள்ளி புள்ளியாக வைத்து கண்டுபிடிக்கப் பட்டு கணிப்பதே கழுத்திரதோச கணிப்பு.

கழுத்தரம், கழுத்திரம், கழுத்திறம் என்ற மூன்று உண்டு. இதே போல் களத்தரம், களத்திரம், களத்திறம் என்று மூன்று உண்டு.

பதினெண் சித்தர்களின் நூல்களில்தான் இவை உண்டு. இந்து வேத நூல்களில் இருக்கு வேதம், அசுர வேதம், யாம வேதம் அதர்வான வேதம் எனும் நான்கு வேதங்களி லும் இவைகளை எப்படியெப்படி பயனபடுத்த வேண்டும் என்ற விளக்கம் உள்ளது.

- கோயிலுக்குச் சென்று கடைசியில் சனி பகவானை கும்பிட்டுவிட்டு நேராக வீட்டிற்கு வரலாமா? அல்லது சனி பகவானை கும்பிட்டுவிட்டு நேராக வீட்டிற்கு வரலாமா? அல்லது சனி பகவானை கும்பிட்டுவிட்டு வேறு தெய்வங்களை கும்பிட வேண்டுமா?

M. இரஞ்சித், மதுரை-10

கோயிலுக்குள் நுழைந்தவுடனேயே பிள்ளையார், பைரவர், ஆஞ்சநேயர், சண்டீசர், ஏழுகன்னிமார்கள், துர்க்கை, காளி, வீரபத்திரர், 63 நாயன்மார்கள், நந்தி, மயில், மூஞ்சூறு போன்றவர்களில் யார் யார் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் பார்த்து கும்பிட்டு விட்டு; ஒன்பது கோள்களை [நவகிரகங்களை] வணங்க வேண்டும். ஒன்பது கோள்களை வணங்கிய பிறகுதான் கோயில் மூலவராக இருக்கின்ற சிவன், அம்மை, முருகன் முதலியோரை வழிபட வேண்டும்.

இருக்கு வேதத்தில் காண்டங்களிலும் 48 மண்டலங்களிலும் கோயில் வழிபாடு பற்றிய செய்திகள் இருக்கின்றன. ஆனால், யாம வேதம், அசுர வேதம், அதர்வாண வேதம் எனும் மூன்று வேதங்களிலும் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குரிய காண்டங்களில் தான் கோயில் வழிபாட்டைப் பற்றிய செய்திகள் இருக்கின்றன. இந்து மதத்திற்குரிய ஆறுவகைப்பட்ட வழக்கு நூல்கள், ஆறு வகைப்பட்ட வாசக நூல்கள், ஆறுவகைப் பட்ட தர நூல்கள், ஆறுவகைப்பட்ட திர நூல்கள், ஆறுவகைப்பட்ட திறநூல்கள் எனும் முப்பத்தாறு வகைப்பட்ட இந்துமத நூல்களிலும் கோயில் வழிபாடு பற்றிய செய்திகள் நிறைய இருக்கின்றன. இவையெல்லாம் தெரியாததால்தான் இந்துக்கள் இந்துமத பற்றோ, பாசமோ, பிடிப்போ, ஈடுபாடோ, விருப்பமோ, அக்கறையோ, ஆர்வமோ, நம்பிக்கையோ இல்லாமல் வாழுகிறார்கள், வாழுகிறார்கள், வாழுகிறார்கள்.

'ஓர் இந்துவின் வாழ்க்கை இந்து கோயில்களில்தான் தயாராகிறது' என்று இருக்கு வேதம் மூன்றாவது காண்டம் ஒன்பதாவது மண்டலம் இருபத்தேழாவது நாள் வாசகம் கூறுகிறது. இதுவே யாம வேதத்தில் 'கோயிலே இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் கற்று தரும் கல்வி நிலையம்', 'கோயிலே இந்துக்களை உருவாக்கும் உலைக்கூடம்' என்ற இரண்டும் பதினெட்டாவது காண்டத்தில் முப்பத்தாறாவது மண்டலத்தில் நாற்பத்தெட்டாவது நாள் வாசகங்களாக இருக்கின்றன.

# குண்டலினி மாயை

இன்றைக்கு நாட்டு நடப்பில் பல தனி மனிதர்களும், பல மத நிறுவனங்களும், சில மத நம்பிக்கை இல்லாத நிறுவன நிர்வாகங்களும் 'குண்டலினி' என்ற பெயரை சொல்லிக்கொண்டு கருத்துக்களை வெளியிடுகிறார்கள்; கட்டுரைகள் புத்தகங்கள் வெளியிடுகின்றார்கள்; பயிற்சி நிலையங்கள், முகாம்கள் நடத்துகிறார்கள்;... இவை இந்துமத உணர்வு, இந்துமத அறிவு, இந்துமத ஈடுபாடு,... முதலியவை நாட்டில் கணிசமான அளவு, விழிச்சியையும், எழிச்சியையும் பெற்றிருக்கின்றன என்பதை விளக்குகின்றன. இது மகிழ்ச்சிக்குரியதே. வரவேற்புக்குரியதே, பாராட்டுக்குரியதே ஆகும்! ஆகும்! ஆகும்!

ஆனால் ஆனால் ஆனால் ! குண்டலினிப் பற்றி பேசுகிறவர்களும், குண்டலினி பற்றி பேசுவதை கேட்பவர்களும்; அதாவது, குண்டலினி என்ற பெயரில் வாழுகின்ற (அ) செயல்படுகின்ற போதனையாளர்களும், மாணவர்களும்...சாதனையாளர்களாக மாறியிருக்கிறார்களா? மாறியிருக்கிறார்களா? மாறியிருக்கிறார்களா?... மாறி வருகிறார்களா? மாறி வருகிறார்களா? மாறி வருகிறார்களா? ...என்ற கேள்விக்குறி, அப்படியே தான் இருக்கிறது, இருக்கிறது, இருக்கிறது.

'குண்டலினி சத்தி பெற்றவர்கள் (அ) பெறப்போகிறவர்கள்... குண்டலினி என்றால் என்ன? அது எப்படி இருக்கும் அனுபவத்தில்?...; அதைப் பற்றி ஏட்டுலக செய்தி என்னென்ன... அதைப்பற்றி நமது மூதாதையர்களான சித்தர்களும், தவசிகளும், முனிவர்களும், இருடிகளும், மகான்களும், ஞானிகளும், யோகிகளும், ஓகிகளும்... என்னென்ன கூறியிருக்கிறார்கள்.

அவர்கள் கூறியுள்ளவைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கக்கூடிய விந்துவழி வாரிசுகளோ அல்லது கருவழி வாரிசுகளோ (அ) குருவழி வாரிசுகளோ இருக்கிறார்களா... இருந்தால் அவர்கள் நிலை என்ன?... என்று ஆராயாமல்தான் இன்றைய குண்டலினி அக்கறையாளர்கள் ஆர்வலர்கள் செயல்படுகிறார்கள், செயல்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். எனவேதான் '**குண்டலினி மாயை**' என்ற தலைப்பு கொடுக்க வேண்டியுள்ளது.

இப்படி பிறர் மனம் புண்பட எழுத நேரிட்டிருப்பதற்கு காரணம்; இன்றைய நாட்டு நடப்பில் 'குண்டலினி' என்ற பெயரில் போதகராகவும், மாணவராகவும் வாழுகின்றவர்களுக்கிடையில்; பெரும்பாலும் சிந்தை, நெஞ்சம், உணர்வு, உடல்... முதலியவை அனைத்துமே பாதிப்புக்களைப் பெற்று உலகியலான வாழ்க்கையில் சிக்கல்களை தோற்றுவித்து விடுகின்றன. இதுதான் உண்மை!

உண்மை இப்படி இருந்தபொழுதிலும் குண்டலினி போதகரோ, மாணவரோ இந்த உண்மையை முழுமையாக உணர்ந்தாலும், வெளியில்கூற கூச்சப்பட்டுக் கொண்டு குழப்பத்திலும், துன்பத்திலும், தொல்லைகளிலும் உள்ளார்கள். அதாவது அதாவது அதாவது!...

குண்டலினியின் பெயரால் பரவலாக பலருக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தபோதும் அதை

வெளியில் கூறமுடியாமல் கூச்சத்தோடும், அச்சத்தோடும் வேதனையை அனுபவிக்கிறார்கள் வேதனையை அனுபவிக்கிறார்கள் வேதனையை அனுபவிக்கிறார்கள்!

ஆனால் ஆனால் ஆனால்! இந்த வேதனையாளர்கள் எல்லாம்; தங்களின் வேதனைகளையே சாதனையாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் சிந்திக்க செய்வதற்காகத்தான் இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்து மதத்தின் முழு முதல் ஆச்சாரியக் குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் தமது அருளுரைகளிலும், அறிவுரைகளிலும், அறிவார்ந்த அருளுரைகளிலும், அருளார்ந்த அறிவுரைகளிலும்; 'இந்து வேதத்தின் சிறந்த போதனையும், இந்து மதத்தின் அரிய பெரிய சாதனையும் குண்டலினியாக, ஓகாசனமாக, யோகாசனமாக, சேவலோன் போர்க்கலைகளாக; அண்டபேரண்டமாளும் மூலப் பதினெண் சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் அருளப்பட்டுள்ளன. இவற்றை உரிய குருவழியாக முறையாகவும், நிறைவாகவும், ஏட்டுலகிலும், நாட்டு நடப்பிலும் கற்றுத் தேறுவதுதான் நல்லது. இல்லையேல், இவை அனைத்துமே மாயையே ஆகிவிடும் என்ற அறிவிப்பு வழங்குகிறார்.

குண்டழினி!? குண்டலினி!?குண்டளினி!? என்ற மூன்றையும் வேறுபடுத்தி, விரிவுபடுத்தி கொள்கையளவில், கருத்தளவில் பிரித்து வேறுபடுத்தி விரிவாக தெரிந்த பிறகே, பிறருக்கு கற்றுக்கொடுக்க முற்படுவதும், பிறரிடம் கற்றுக் கொள்வதும் நிகழ வேண்டும், நிகழ வேண்டும் நிகழ வேண்டும்... நிகழ்த்தப்பட வேண்டும்.

எனவேதான், **இருக்கு வேதம்** (ரிக் வேதம்) **காண்டம் 5: மண்டலம் 25: நாள் வாசகம் 18.**

'குண்டழினி, குண்டலினி, குண்டளினி மாயையைகளை கடந்தவர்களே போதகர்களாக இருந்து சாதகர்களை உருவாக்க வேண்டும். ஏனெனில், இக்குண்டலினி தொடர்பாகவே ஓகாசனம், யோகாசனம், சேவலோன் போர்க்கலைகள், தவம், பூசை, ஞானம் முதலிய அனைத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. எனவே, இந்துமதம் சிறப்பாக மானுடர்களுக்கு ' பயன்பெற வேண்டுமென்றால் குண்டலினியை நன்றாக தெரிந்து புரிந்து செயல்பட்டிடல் வேண்டும்'.

## அசுரவேதம் (யசூர்வேதம்)

காண்டம் 18 மண்டலம் 27 நாள் வாசகம் 32

'குண்டலினியை முறையாகப் பயிலாமல் பயிற்சி செய்தால் உடம்பின் சுவையுணர்வுகள் அனைத்தும் பாதிக்கப்பட்டு விடும். உடலுறுப்புக்களின் ஆற்றலில் நலிவும், நோய் நிலைகளும் உருவாகும். இதை புரிந்து குண்டலினியை நெருங்க வேண்டும்'.

## யாமவேதம் (சாமவேதம்)

காண்டம் 9 மண்டலம் 16 நாள் வாசகம் 36

'குண்டழினி, குண்டலினி, குண்டளினி... என்ற மூன்றுதான் அசுரவேதம், யாமவேதம், அதர்வான வேதம் என்ற மூன்றை தனித்தனி வேதங்களாக பிறப்பித்துள்ளன என்ற பேருண்மை தெரிந்தால்தான், புரிந்தால் தான் பத்தி, சத்தி, சித்தி,முத்தி,... எனும் நான்கும் உரிய பயனை பெரிய அளவில்

விளைவித்துத்தரும். அதாவது, குடமுழுக்கு பூசையை செய்து வழிபாட்டுக்குரிய, பூசைக் குரிய, கும்பிடுதலுக்குரிய, வணங்குவதற் குரிய, தொழுகைக்குரிய, அழுகைக்குரிய, எள்ளலுக்குரிய, ஏசலுக்குரிய (எனும் எட்டு வகையான அருளுலக அணுகுமுறைகளுக்கும் உரிய) மூலவர்களுக்கு உயிர்ப்பையும், புத்து யிர்ப்பையும் செய்ய முடியும். தங்களுக்குள் தாங்களே கற்றல், நோற்றல், உற்றல், பெற் றல் என்ற நான்கும் வறுமையையோ, வெறு மையையோ அடைந்திடாமல் இருக்கும்' படிச் செய்ய முடியும்.

## அதர்வான வேதம் (அதர்வன வேதம்)

காண்டம் 7 மண்டலம் 21 நாள் வாசகம் 42

'அண்டபேரண்டமாளும் பதினெண் சித் தர்களும், பதினெட்டாம் படிக்கருப்புகளும், தங்களுடைய தாய் மொழியும், அண்ட பேரண்டமாளும் அருளுலகக் ஆட்சி மொழியு மான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் குண்டழினி, குண்டலினி, குண்ட ளினி என்ற மூன்றுக்கும் செந்தமிழ் மொழிக் குரிய முன்னூற்று இருபத்து மூன்று (323) எழுத்துக்களிலும் தனித்தனி எழுத்துக்களை தேர்ந்தெடுத்து அறிவித்திருப்பதை; உடம் பில் உள்ள முப்பத்திரண்டு அங்கங்களிலும் இட்டும், தொட்டும், சுட்டியும் பதிவு செய்து கொண்ட பிறகுதான் பயிற்சியினை துவக்க வேண்டும். இல்லையேல், குண்டழினியும் மாயையே, குண்டலினியும் மாயையே, குண் டளினியும் மாயையே!...

என்றிப்படி இந்து வேதத்தின் நான்கு வேதங்களும் மிகத் தெளிவாக குண்டலினிப் பற்றி கூறுவதால்தான்; இம்மண்ணுலகுக்கு இந்து வேதத்தை அருளிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியும்; இம்மண்ணுலகில் இந்து மதத்தை தோற்றுவித்த பதினெண் சித்தர் பீடத்தின் பீடாதிபதியும்; இம்மண் ணுலகின் பொருள்களும், பயிரினங்களும், உயிரினங்களும் உய்வு பெறுவதற்காக தரம், திரம், திறம் என்ற மூன்றையும் உடைய முத் தமிழ் மொழியினை; ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றையும்உருவாக்கும்ஆற்றலுடைய கருவாற்றல் மொழியினை, குருவாற்றல் மொழியினை, தருவாற்றல் மொழியினை, திருவாற்றல் மொழியினை இம்மண்ணுல குக்கு அருளிய செந்தமிழ் மொழியின் மெய்ஞ் ஞான சபையின் தலைவருமான அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம் இந்து வேதாகம பாடசாலை யின் மூலமும், இந்து வேத முன்னேற்ற கழகத்தின் மூலமும் (I.M.I.) இந்து விடு தலை சிங்கங்களின் சங்கம் மூலமும் (I.I.L. L.S.) அருட்பணி விரிவாக்கத் திட்டத்ல்ன் மூலம் [A.V.T.]... நாடு முழுவதும் மக்க ளுக்கு அருளை அனுபவப் பொருளாக மருந் தாகவும், விருந்தாகவும் வழங்குகின்ற நான்கு வேத யாகசாலை அருட்கோட்டங்களின் மூல மும் அருட்கொடையாக வழங்குகிறார்.

எனவே, குண்டலினி மாயையால், ஓகா சன மாயை, தவமாயை, ஞானமாயை... முத லிய மாயைகள் தோன்றி அல்லது தோற்று விக்கப்பட்டு இந்து மதத்தையே இந்துக்கள் மறக்கவும், துறக்கவும், மறுக்கவும், வெறுக்க வும், பகைக்கவும் நகைக்கவும் நேரிடும்படி ஆகி விட்டது. இதனாலேயே, இந்துக்கள், தங்களுடைய பல்வேறு வகையான சிக்கல் களுக்கும் பாதிப்புக்களுக்கும் பரிகாரம் தேடி மாற்று மதத்தவர்களிடம் செல்ல வேண்டிய நிலை உருவாகி விட்டது... மத மாற்றங் கள் கூட நிகழ்வது குண்டலினி மாயையால் என்றுகூட குற்றம் சாட்டலாம்.

# மந்திரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் ! ?

எவ்வளவுதான் முதல் உதவி முறைகளும், விஞ்ஞான மருத்துவ முறைகளும்... வளர்ந்திட்ட போதிலும் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும், வயதானவர்களுக்கும், குளிர் காய்ச்சல்காரர்களுக்கும் மருத்துவ பரிசோதனைக்கு அப்பாற்பட்ட உடல் நலிவு மெலிவு உடையவர்களுக்கும்... மந்திரிப்பதுதான் மந்திரிப்பதுதான் மந்திரிப்பதுதான்!!! இறுதியான, உறுதியான மருத்துவம் மருத்துவம்! மருத்துவம்! என்ற நோக்கையும் போக்கையும் படித்தவர் முதல் படியாதவர்வரை; ஏழை முதல் பணக்காரர்வரை;...நாத்திகர் முதல் ஆத்திகர் வரை ஏற்றுக்கொண்டுள்ளனர்! ஏற்றுக்கொண்டுள்ளனர் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதுதான் உண்மை உண்மை உண்மை!

ஆனால் ஆனால் ஆனால்! இந்த உண்மை; பெரும்பாலும் பெரும்பாலும் பெரும்பாலும் குறைத்தும், மறைத்தும், நிறைத்தும் பயன்படுத்துவரின் நிலைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துகின்றன என்பதே பேருண்மை பேருண்மை பேருண்மை.

இருந்த போதிலும்! இருந்த போதிலும்!!இருந்த போதிலும்!!! இந்துக்கள் மட்டும் இந்துக்கள் மட்டும் இந்துக்கள் மட்டும், இந்துக்கள் மட்டுமே தங்களுடைய பெரும்பாலான; நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது எண்ணிக்கைக்கு உட்பட்ட கோயில்களில் மந்திரிப்பதையும், மந்திரிக்கப்படுவதையும் கேவலமானதாக!? இழிவானதாக!? தேவையற்றதாக? கருதி கருதி நினைத்து நினைத்து தடுத்து விட்டார்கள்! தடுத்து விட்டார்கள்!! தடுத்து விட்டார்கள்!!!

எனவேதான்!?!? எனவேதான்!?!? ஏறத்தாழ பெரும்பாலான இந்துக்கள் வேற்று நாட்டின் மாற்று மதத்தவர்களுடைய கோயில்களுக்கு சென்று கோயில்களுக்கு சென்று மந்திரித்துக் கொண்டு வருகிறார்கள்! மந்திரித்துக் கொண்டு வருகிறார்கள்!! மந்திரித்துக்கொண்டு வருகிறார்கள்!

இதனால்! இதனால்! இதனால்!!அன்னிய மொழிக்கும் அன்னிய மதத்துக்கும் உரிய மந்திரவாதிகளின் முடிகயிறுகளும், தாயத்துக்களும், பதக்கங்களும், சக்கரங்களும் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருக்கின்றன, மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருக்கின்றன, மிகுந்த செல்வாக்கைக் பெற்றிருக்கின்றன!!!

இப்படியாக, இப்படியாக, இப்படியாக!?இந்துக்கள் தங்களுடைய மத நம்பிக்கைகளையும், பற்றுக்களையும், பாசப்பிணைப்புக்களையும் உறவுப் பிடிப்புக்களையும் வாழ்வியலின் உயிர் துடிப்புகளையும் அன்னிய மதத்தவர்கள் வெடி வைத்து தகர்த்து முடிவு கட்டிட வழி வகைகளையும், வசதி வாய்ப்புக்களையும் உருவாக்கித் தருகிறார்கள், உருவாக்கித் தருகிறார்கள், உருவாக்கித் தருகிறார்கள்!!!

இதை தடுக்க இதை தடுக்க இதை தடுக்க இன்றைய இந்துமத மடாதிபதிகளோ, பீடாதிபதிகளோ, சன்னிதானங்களோ, ஆதினங்களோ, தம்பிரான்களே, அடிகளார்களோ, ஆச்சாரியார்களோ, முற்படவில்லை! முற்படவில்லை!! முற்படவில்லை!!! முன்வரவில்லை! முன்வரவில்லை! முன்வரவில்லை!!

ஏன்? ஏன்? ஏன்?... எதற்காக? எதற்காக? எதற்காக? சந்தியுங்கள்! சிந்தியுங்கள்!

— இந்து வேதாகம பாடசாலையின் போதகர்களையும், சாதகர்களையும்.

# அசரீரி

இந்திய அரசலமைப்புச் சட்டம் மதங்களுக்கு முரணானது; மதக் கோட்பாடுகளை மதிக்கவில்லை; மாறாக மறுக்கிறது- இதை நான் சொல்லவில்லை. இது ஒரு பொறுப்புணர்வுமிக்க நீதிபதி ஒருவரால் நிலை நாட்டப்பட்ட கருத்தாகும். அவரும் தனிப்பட்ட முறையில் கூறியுள்ள சொந்த கருத்தல்ல? சட்டப்பூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பில் கூறப்பட்ட வாசகங்களின் அடிப்படையில் செய்யப்பட்ட முடிவேயாகும்!?!?!?

சமீபத்திய நாளிதழ்களில் ஒரு விசித்திர வழக்கைப் பற்றிய செய்திகளை நீங்கள் படித்திருக்கலாம். திருமணமாகாத 16 வயதுப் பெண்ணின் வயிற்றில் வளரும் கருவைக் கலைக்கச் சொல்லும் உரிமை பெண்ணின் தந்தைக்கு உண்டா? என்பதே வழக்கு. வழக்கின் முடிவு நமக்கு முக்கியமல்ல-ஆனால், தீர்ப்பில் கூறப்பட்டுள்ள ஒரு வாசகமே நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது. அவ்வாசகம்; ''கருவை கலைக்கக் கூடாது என்று நமது நாட்டிலுள்ள மதங்கள் வலியுறுத்துகின்றன'' ஆனால், நமது சட்டப்படி கருகலைப்பு குற்றமல்லவே. கரு கலைப்பை பல வகைகளில் ஊக்குவிக்கிறது. மதங்களுக்கு எதிரான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதா? சட்ட புலிகள் விளக்குவார்களா? அரசியல் வாதிகள் ஆலோசிப்பார்களா? மதவாதிகள் சீறுவார்களா? மக்கள் சிந்திப்பார்களா? அல்லது வழக்கம் போல் மறப்பார்களா? அல்லது வீறு கொண்டெழுந்து மதத்திற்கு எதிரான கோட்பாடுகளையும் சட்டங்களையும் குப்பைத் தொட்டிக்கு அனுப்புவார்களா? காலத்தின் கரங்களில் இதை அனைத்தையும் விட்டு விட்டு ஆதாரம் கேட்டு நம்மைச் சாட நினைப்பவர்கள் 3-12-93 தேதியிட்ட தினத்தந்தி நாளிதழின் 8-வது பக்கத்தைப் பார்க்கலாம்.

சென்ற இதழ் 'அசரீரி' நண்பர்களின் தாக்கம் இன்னும் என்னைவிட்டு நீங்கவில்லை. அவர்கள் மேற்கண்டவையைப் படித்திருந்தால் என்னவாறு பேசியிருப்பார்கள்? இப்படியா? ''மதங்களுக்கு எதிரான அரசியல் சட்டத்தை நம் தலையில் கட்டியது. இந்தியாவின் தந்தை மகாத்மா காந்தி மகான்தான்! இந்திய அரசியல் சட்டத்தில் இராமரையும்; இந்து மதத்தையும் இருட்டடிப்பு செய்தது ஏன்? இது மட்டுமல்ல, விடுதலைக்குப் பல முரண்பாடுகளை ஆதரித்தவர். நமது காந்தி மகான் எளிமையான உடைகளை அணிய வேண்டும் என்றவர், ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று முறை அன்னிய நாட்டு பாணியில் தைக்கப்பட்ட உடைகளை அணியக்கூடிய சவகர்லால் நேருவை 'வாரிசாக அறிவித்தது ஏன்?' தனி மனிதர்கள் கூட தன்னிறைவு வாழ்க்கை [Self Reliance in Life] வாழ வேண்டும் என்று கூறியவர், இந்திய நாடு பல ஆயிரம் கோடி ரூபாய்களை கண்மூடித்தனமாக வெளி நாடுகளில், தொடர்ந்து கடன் வாங்கி ஆடம்பரச் செலவுகள் செய்வதை கண்டிக்காதது ஏன்? இராட்டையையும், விவசாயத்தையும் போற்றியவர், கனரகத் தொழில்களிலும் பிரதமர் நேருவையும் கண்டிக்காதது ஏன்? இந்தியாவின் இதயம் கிராமங்கள்தான் என்றவர், கிராமங்களின் வளர்ச்சிக்கு என்ன செய்தார்? கிராமங்களை அழிக்கக்கூடிய வண்ணம் அசுர வேகத்தில், புயல் வேகத்தில் மாநகரங்களை வளர்த்திடும் திட்டங்களை உடைய அரசாங்கத்தை ஆதரித்தார். மாறாக கண்டிக்கவில்லை. கிராம கைத் தொழில்தான் வளர வேண்டும் என்று கூறிக் கொண்டு, கிராமத்தின் வளர்ச்சிக்குரிய விவசாயத்தையும், அதைச் சார்ந்த கிராமத் தொழில்களையும் வளர்க்காமல் இயந்திர புரட்சியை ஊக்குவித்துவிளைச்சல் நிலங்களைஎல்லாம் தொழிற்சாலைகளாகவும்; நகர கட்டிடங்களாகவும் மாற்றிடும் அரசாங்கத்தின் போக்கை கண்டிக்கவில்லை.

கிராமத்தின் குடிசைத் தெழில்களை நசுக்கக் கூடிய வண்ணம் தொழில்களையெல்லாம் இயந்திரமாக்கிய திட்டங்களை எதிர்க்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் இந்திய பண்பாட்டின்படி வேட்டி கட்டிக் கொண்டிருந்த மகாத்மா காந்தி வேட்டி கட்டும் பழக்கமுடைய இராசேந்திரபிரசாத்தையோ, பந்தையையோ, நேத்தாஜி சுபாஷ் சந்திரபோசுவையையோ, வல்லபாய் படேலையையோ, செகசீவன்ராமையையோ, வினோபாவையையோ, செயபிரகாச நாராயணனையையோ, இலால் பகதூர் சாஸ்திரியையோ, இராசகோபாலாச்சாரியையோ, காமராசரையோ, சரண் சிங்கையோ, கிரிபிலானியையோ, தன்னுடைய வாரிசாக அறிவிக்காமல்; உடை, உணவு, சீமை சாராயம், சிகரெட்டு முதலியவைகளை பயன்படுத்தி ஐரோப்பிய நாகரீகத்தில் ஊறிக் கிடந்த சவகர்லால் நேருவை ஏன் வாரிசாக அறிவித்தார். இதற்கெல்லாம் காங்கிரசுகாரர்கள் பதில் சொல்வார்களா?'

நிச்சியம் எனக்குப் பதில் தெரியாது — காந்தீயவாதிகள் பதில் கூறுவார்களா?! என் போன்றோரின் சந்தேகம் தீருமா!?

-கருத்தா

## காங்கிரசின் சாதனையே!!!
## பிரிவினைப் போக்கு???

நன்றி : தினமலர் 12-12-93 ஞாயிறு பக்கம்-7

'இந்தியா வடிவக் கேக் ஆந்திர மந்திரிகள் வெட்டி சாப்பிட்டனரா'?

'ஆந்திராவில் காங்கிரசு அரசின் நான்காம் ஆண்டு கொண்டாட்ட விழாவில்...

...அதாவது 'ஆந்திராவில் மேடத் மாவட்டம் கஜ்வல் என்ற இடத்தின் உள்ளூர் காங்கிரசார் நடத்திய விழாவில் மூத்த அமைச்சர்களான நிதியமைச்சர் ரோசையா, வருவாய்த் துறை அமைச்சர் ராமிரெட்டி, சுற்றுலாத்துறை அமைச்சர் கீதாரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்'...

'இந்தியா வடிவிலான கேக்கை அமைச்சர்கள் மூவரும் துண்டுதுண்டாக வெட்டி தானும் உண்டு மற்றவர்களுக்கும் விநியோகித்தனர்'...

'நாட்டின் ஒற்றுமை, இறையாண்மையை காக்க வேண்டிய அமைச்சர்கள் இந்தியாவை சென்டிமென்டாக துண்டாடி விட்டனர்'...?

...'பஞ்சாப், காஷ்மீர், அசாம், நாகாலாந்து, சார்கண்ட், விடுதலைப் புலிகள் பிரச்சினை ஆகியவை காங்கிரசு கட்சி ஆட்சியில் உதித்தவையே'...

இன்றைய காங்கிரசு கட்சி ஒவ்வொரு மாநிலத்திலும் வெவ்வேறு வகையான அரசியல் கட்சிகளோடு உறவு வைத்துக் கொள்கிறது.

மிசோராமில் கிறித்துவ மத வெறியர்களோடும் உ.பி-யில் முஸ்லீம் மத வெறியர் களோடும், தமிழகத்தில் பிரிவினவாத வெறியர்களோடும்,

இமாசலத்தில் வட்டார வெறியர்களோடும், நாட்டு நடப்பில் இந்துமத எதிர்ப்பு வெறியர்களோடும் மே. வங்காளத்தில் கம்யூனிச வெறியர்களோடும், கேரளத்தில் முஸ்லீம் வெறியர்களோடும், கம்யூனிச வெறியர்களோடும்,

பம்பாயிலும், சென்னையிலும் வெடிகுண்டு கலாசாரத்தை வளர்க்கின்ற முஸ்லீம் வெறியர்களோடும்...

காங்கிரசு கட்சி தொடர்பை வைத்துக் கொண்டிருப்பது, வளர்த்துக் கொண்டி ருப்பது மிகுந்த கவலையை தருகிறது!

வருங்காலத்தைப் பற்றி அச்சத்தைத் தருகிறது?... அதாவது, 'காங்கிரசின் சாதனையே பிரிவினைப் போக்கு'... என்ற முடிவு விளைவித்து விடக்கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது. எச்சரிக்கை? எச்சரிக்கை? எச்சரிக்கை...?

# அறிவியல் சமயத்தைப் பொய்யாக்குகிறதா?

## அன்றி

# மெய்யாக்குகிறதா? (சமயமும் அறிவியலும்)

தொகுப்பு : **அருள்மிகு, அருட்போர் வியூக நாயகம் வேப்பை சீ. மணி.**

டிசம்பர் மாத இதழ் தொடர்ச்சி -5

இவ்வாறு சமயத்தையும் அறிவியலையும் ஒப்பிட்டுக் காட்டுவதால் இரண்டும் சமமானவை என்ற ஒரு மாபெருந் தவறான கருத்து உங்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது. இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று மாறானவையல்ல! வேறானவையல்ல!!முரண்பாடானவையல்ல என்பதை விளக்கிடத்தான் இதுவரை சில ஒப்புமைகளைக் குறிப்பிட்டேன். சமயம் என்பது ஒரு பெரிய பரந்து விரிந்துபட்ட கடற்கரையில் மணற்பரப்பு போன்றது.

அறிவியல் என்பது அக்கடற்கரை மணலை எண்ணப்போவதாக எண்ணிக்கை நிறைய மணலை அள்ளித் தன்மடியில் போட்டுக் கொண்டு அவற்றை எண்ணிப் பார்த்திட ஆரம்பிக்கும் சிறுவனைப் போன்றது. இந்த ஓர் உவமானமே போதும்; சமயத்தின் அளத்தற்கரிய பெரிய நிலையையும்; அறிவியலின் அளத்தற்குரிய மிகச் சிறிய நிலையையும் விளக்கிடும். இம்மட்டில் இரண்டினையும் சமமாக நோக்குவதை நிறுத்திக் கொண்டு சமயத்தின் அளப்பரிய பெரிய நிலையை விளக்கிட முன் வருகிறேன். ஆங்காங்கே அறிவியலின் ஆரம்ப நிலையை, சிறுவனின் விளையாட்டுப் போக்கு வெற்றியினை சுட்டிக் காட்டிடவும் விழைகின்றேன்.

மனிதன் வாழப் பேருதவியாக உள்ள இயற்கையின் 'விண்' 'வளி' 'தீ' 'நீர்' 'மண்' என்று ஐம்பெரும் பகுப்புகளாகச் சமயவாதிகளும், அறிவியல்வாதிகளும் பகுக்கின்றார்கள். இவையே 'பஞ்சபூதம்' ஐம்பூதம்' என்றழைக்கப்படுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு உயிரியல், உடலியல், உலகியல், இயற்கையியல், இறையியல் எனும் ஐந்தினையும் கணிக்கும் சாத்திறமே 'பஞ்சாகம்' என்றும், 'ஐந்திறம்' என்றும் முறையே அழைக்கப்படுகின்றன. தொல்காப்பியர் இந்த 'ஐந்திறம்' எனும் சாத்திறத்திலே வல்லவராக இருந்தால்தான் அவருடைய இலக்கண நூல் மொழிக்கு மட்டும் வரையறை கூறப்பட்ட ஓர் இலக்கண நூலாக இல்லாமல் தனி மனிதர் வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, இயற்கையில், உயிரியல் ஆகிய ஐந்தினையும் முழுமையாக விளக்கிடும் ஓர் ஒப்புயர்வற்ற வாழ்க்கை நூலாக அமைந்திட்டது.

சமயம் 'விண்வெளியில் கணக்கற்ற ஒளியுடைய மீன்கள் தெரிந்த போதும், ஒளியில்லாத கோள்களும் விண்ணில் இருக்கின்றன'

என்று பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியது. இப்பேருண்மையினை அறிவியல் தனது வான சாத்திரச் சாதனைகளால் ஆராய்ந்து ஒப்புக் கொண்டது.

விண்ணில் ஒளியுடைய விண்மீன்கள் (Stars), ஒளியில்லாத கோள்கள் (Planets) இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற பேருண்மையினை அறிவியல் ஒப்புக்கொண்ட போது; நாத்திகர்களும். பகுத்தறிவாதிகளும் குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்து, எதிர் பாராமல் அங்கு பதுங்கியிருந்த எலியைப் பிடித்தது போன்று; சமயத்தின் கற்பனை வாதங்களில் இது ஓர் உண்மை என்கிறார் கள்.

அறிவியல், விண்வெளித் தொலைநோக்கிக் கருவிகளைப் (Astrnomical Telescopes) புதிது புதிதாகக் கண்டுபிடித்துப் பல அரிய பெரிய உண்மைகளை உணர ஆரம்பித்தது. பல மீட்டர் விட்டமுடைய பாலமார் டெலசுகோப் அமைக்கப்பட்டு விண்வெளியை ஆராய்ந்த போது 'ஏழு கோள்கள்தான் உலகின் அருகில் உள்ளன; சமயவாதிகள் கூறுவதுபோல் ஒன் பது கோள்கள் விண்வெளியில் இல்லை' என்ற முடிவு அறிவிக்கப்பட்டது. அதாவது, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியா ழன், வெள்ளி, சனி என்று ஏழு கோள்கள் தான் விண்ணில் உள்ளன; 'இராகு', 'கேது' என்ற இரண்டு கோள்கள் இல்லை.

ஆனால், எல்லாக் கோயில்களிலும் 'நவக் கிரகங்கள்' 'ஒன்பது கோள்கள்' வழிபாட்டுக் குரிய சிலைகளாகவே இருக்கின்றன. அறி வியலின் அறிவிப்பு நாத்திகர்களுக்கும், பகுத் தறிவாதிகளுக்கும் பெருவிருந்தாயின. 'ஒன் பது கோள்கள் இருப்பதாகக் கற்பனை செய்த தோடு நிற்காமல்; இந்த சமயவாதிகள் ஒன் பது கோள்களுக்கும் தனித்தனி வடிவத்தை யும், வாழ்க்கை வரலாற்றையும், புராணப் பெருமைகளையும் உண்டாக்கி மக்களை மடையர்களாக, மூடர்களாக ஆக்கி விட்டார் களே! நல்ல வேளையாக அறிவியல் காப் பாற்றி விட்டது...' என்று பலவாறாகப் பகுத் தறிவாதிகளும், நாத்திகர்களும் பேசித் தீர்த் தார்கள்.

அறிவியல் என்பது வளர்ந்து வருகின்ற ஒருகலை. சமயம் என்பது வளர்ந்து முடிந்து நிறைவு பெற்று அழியாப் பெருநிலை பெற்று விட்ட ஓர் அரிய அளப்பரிய கலை. எனவே, அறிவியல் நாளுக்கு நாள் சமயத்தின் ஒவ் வோர் அங்கத்தை உணர்ந்து வரலாயிற்று. அதன் பயனாக 'விண்வெளியில் இருபத் தேழு விண்மீன்கள் அனுப்பும் ஒளியும், ஏழு கோள்களின் சுழற்சியால் வரும் ஒலியும் இரண்டு பெரிய காற்று மண்டலக் கோளங் களை உண்டாக்கியுள்ளன. அம்மண்டலங் களில் திடப்பொருள் ஏதுமில்லாவிடினும்; அழுத்தமான காற்று மண்டலம் ஒலிஒளி அணுக்கள் சுழல இயங்குகின்றன. அவை, இந்த உலகுக்குத் தொடர்ந்து ஒலிஒளி கலந்த அணுக்களை அனுப்பிக் கொண்டே யிருக்கின்றன. இந்த அணுக்கள் உயிரினங் களைப் பாதிக்கின்றன... என்ற பேருண்மை கண்டுபிடிக்கப்பட்டது.

இப்பேருண்மை சமயம் 'இராகு' 'கேது' என்ற இரண்டு கோள்களே பிறப்பியலின்படி (சாதகம்) மனித வாழ்வில் அன்றாட நன்மை தீமைகளை நிர்ணயிக்கின்றன என்று கூறு கிறது. அத்துடன் இராகும், கேதும் தனித்த வடிவமின்றிப் பாம்பின் சீறல் ஒலிபோலிருக் கும் என்றும் சமயம் கூறுகிறது. இக்கருத்துக் கள் அறிவியலைவிடச் சமயம் பல கோடி மடங்கு உயர்ந்தது, சிறந்தது, உண்மை யானது. ஆராய்ச்சி மிக்கது என்பதை விளக்கு கின்றன.

(தொடரும்)

# மாரி காயந்திரி

## மந்திரம்

1. முத்தியே! பந்தபாசக் கௌமாரியே! அணிமணிமகுடக் குருதி விருப்பாளே!

2. சித்தியே! தடக்கையாளே! அமுதே! மலர் மாலையாளே! நாற்கையாளே!

3. சத்தியே! ஒன்பது சுடர் முடியாளே! ஐந்நாகக் குடையாளே! அருட்கையாளே!

4. பத்தியே! மூன்றாம் பிறையாளே! தாயாதீதப்பாசமே! தவபீடமே! அருட்பெருஞ்சுடரே!

5. தீமைதீய்க்கும் தீச்சட்டியாளே! பூக்குளியலாய்த் தீக்குளிக்கும் தீக்குழித்தேவியே!

6. பிழைக்கவருளிடுக! பிழைக்கவருளிடுக! பிழைக்கவருளிடுக! பிழைக்கவருளிடுக! பிழைக்கவருளிடுக!



# இந்து ஆரணம் வாசகர்களுக்கு
# இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

தொடர்பு முகவரி :

ஆசிரியர்

**இந்து ஆரணம்**
நெ. 13, குமாரசாமித்தெரு,
வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை-600 053
போன் : 654447

மாவட்டந்தோறும் ஏஜெண்ட் தேவை!

**விளம்பர விகிதம்**

| | |
|---|---|
| அட்டை கடைசிப் பக்கம் | ரூ. 1000 |
| 2-ம் பக்கம் | ரூ. 750 |
| 3-ம் பக்கம் | ரூ. 600 |
| உள்பக்கம் முழு பக்கம் | ரூ. 500 |
| அரைப் பக்கம் | ரூ. 250 |

ஆசிரியர் & வெளியிடுவோர் : கு. இரவிமணி நெ. 10, டிரஸ்ட்பாக்கம்
தெற்கு மந்தைவெளி, சென்னை-28.